பக்கங்கள் - 23

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 19 புதன்கிழமை 05.11.2025 | அதிர்வு 98

## தென்மராட்சியில் ஹெரோயினுடன் இளைஞர் கைது!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி, வரணியில் ஹெரோயின் பாதைப்பொரு 05▶



# அநுர அரசின் கட்டளைக்கமைய செயற்படும் பாதாளக் குழுக்கள்

## இப்படி நாமல் பகிரங்கக் குற்றச்சாட்டு

"அநுர அரசின் அனுசரணையுடன்தான் பாதாளக் குழுக்கள் இயங்குகின்றன. இந்த அரசின் கட்டளைக்கமையவே அந்தக் குழுக்கள் செயற்படுகின்றன. இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்படுபவர்கள் அனைவரும் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு என்று குறிப்பிடுவது அரசாங்கத்தின் பல வீனத்தை வெளிப்படுத்துகின்றது."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன 05▶

# வவுனியாவில் இளம் குடும்பப் பெண் கொலை!

## *இரண்டு வயது பெண் குழந்தையுடன் கணவர் தலைமறைவு*

(கி.வசந்தன்)

வவுனியா, பூம்புகார் பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவரின் சடலத்தை நேற்று பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பெண் அவரது கணவர் மற்றும் பெண் குழந்தையுடன் வீட்டில் இருந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் தாயார் பணி நிமித்தம் வெளியில் சென்றுவிட்டு மாலை வீட்டுக்குச் சென்று பார்த்தபோது தனது மகள் சடலமாகக் கிடந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த இ.சிந்துஜா (வயது 25) என்ற ஒரு பிள்ளையின் தாயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 04▶






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிரான வழக்கு நேற்று மீண்டும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் மூன்று வாரங்களுக்கு - நவம்பர் 25ஆம் திகதிக்கு - ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

இடையீட்டு எதிராளி என்ற பெயரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, இந்த வழக்கு திட்டமிட்டு இழுத்தடிக்கப்படுவதற்கு முயற்சிக்கப்படுவதாக எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் நேற்று நீதிமன்றத்தில் ஆட்சேபம் தெரிவித்தமையால் வழக்கு மூன்று வாரங்களில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு திகதியிடப்பட்டுள்ளது.

இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போது இது இரண்டு, மூன்று வருடங்களுக்கு மேல் இழுபடுமென்று ஏற்கனவே குறிப்பிட்டு வந்தேன். அதுவே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சியைச் சேர்ந்த தமிழ 04▶



# போதைக்கு எதிரான சமரைக் கண்டு அஞ்சாதீர்கள்! சண்டியர்களை நிச்சயம் நொண்டியர்களாக்குவோம்!!

## சாவகச்சேரியில் அமைச்சர் சந்திரசேகர் சூளுரை

“போதைப்பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சமரைக் கண்டு அஞ்ச வேண்டாம். அதற்குப் பேராதரவு தாருங்கள். வடக்கு மண்ணில் இருந்து போதைப்பொருள் மாபியாக்கள் உட்பட குற்றச்செயல்களில் ஈடுபடும் தரப்புகளைத் துடைத்தெறி வோம்.”

– இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகம் இணைந்து நடத்திய நடமாடும் சேவை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப் பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்ட செயலாளர் ம.பிரதீபன், சாவகச்சேரி பிரதேச செயலாளர் சத்தியசோதி, நகர சபை தவிசாளர், பிரதேச சபை தவிசாளர், அரச அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“போதைப்பொருள் விற்பனையாளர் கள், கஞ்சா கடத்துபவர்கள் மற்றும்



வாள்வெட்டுக் குழுவினரால் யாழ். மாவட்டம் சீரழிந்து வருகின்றது. எனவே, இவற்றுக்கு முடிவு கட்டி, சமூக நிலை மையைத் தோற்றுவிக்குமாறு யாழ். மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். தற்போது போதைப்பொருள் கும்பல் மற்றும் பாதாளக் குழு உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு வருகின்றது.

போதைப்பொருளுக்கு எதிரான கூட்டு நடவடிக்கை நாடு தழுவிய ரீதியில் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. பாதாளக் குழு பின்ன ணியில் கறுப்பு நிர்வாகப் பொறிமுறை யொன்றே உள்ளது. இதற்கு உதவும் சில நபர்கள் எல்லா இடங்களிலும் இருக் கவே செய்கின்றனர். இதன் பின்னணியில் கறுப்புப் பணம் புகுந்து விளையாடு கின்றது.

இந்நிலைமையைக் கண்டும், காணா ததுபோல் இருக்க முடியாது. அது எமது இளைய தலைமுறையினருக்கு இழைக் கும் பெரும் துரோகமாகும். எனவே, யுகத்துக்கு முடிவு கட்டப்படும். மக்களால் சட்டப்பூர்வமாக செயற்படும் அரசாங்கம் தான் நாட்டை ஆள வேண்டும். கறுப்பு உலகத்தால் நிர்வாகத்தை முன்னெடுக்க இடமளிக்க முடியாது.

மக்களுக்காகச் செயலாற்றுவதே எமது அரசாங்கத்தின் நோக்கம். ஊழல், மோசடிகளற்ற தூய நிர்வாகத்தை நோக்கிய பயணத்துக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் தமது ஒத்து ழைப்பை வழங்க வேண்டும். அரச ஊழி யர்களுக்குரிய அத்தனை வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

போதைப்பொருளுக்கு முடிவு கட்டுவதற்குரிய சமர் ஆரம்பமாகியுள்ளது. இந்தச் சமரை கண்டு அஞ்ச வேண்டாம். அதற்குப் பேராதரவு தாருங்கள். மக்களுக் குத் தகவல் தெரியும். அதனை உரிய தரப்பினருக்கு அறிவியுங்கள். எதற்கும் அஞ்ச வேண்டாம். இளைஞர்களே முன்வாருங்கள், உங்களுக்குப் பின்னால் அரசாங்கம் நிற்கும். சண்டியர்களை நொண்டியர்களாக்குவோம்.” – என் றார்.











# சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சேவை

## ஆயிரக்கணக்கான மக்கள் பயனடைவு

(த.சுபேசன்)

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும் சாவகச்சேரி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை சாவகச்சேரிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் சத்தியசோதி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஆள்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை), ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகனப் பதிவு மற்றும் வாகன வருமான அனுமதிப்பத்திரம் தொடர்பான சேவைகள், நகரசபை, பிரதேச சபைகளினால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், மனித வள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள், திறன் அபிவிருத்தி தொடர்பான தொழிற்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல்கள், சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள்,

முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், இலவச மருத்துவ முகாம், பொது மருத்துவ பரிசோதனைகள், கண்புரை பரிசோதனை (Cataract) மற்றும் இலவச மூக்குக்கண்ணாடி வழங்குதல் ஆகிய சேவைகள் இடம்பெற்றிருந்தன.



நிகழ்வின் ஓர் அங்கமாக ஜோடி ஒன்றிற்கு பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டதுடன் வறுமை நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலியும் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், சாவகச்சேரி நகர சபைத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ், சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளின் உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள், சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மற்றும் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஆகியன மக்களுக்கான சேவைகளை வழங்கியிருந்தன.

இதன்போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சேவையினைப் பெற்று பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரசுக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை. அவரின் சகோதரரான கட்சி உறுப்பினர் பரமானந்தன் என்பவர் தம்மையும் இந்த வழக்கில் ஓர் எதிராளியாகச் சேர்த்துக் கொள்ளக் கோரி சமர்ப்பித்த விண்ணப்பத்தின் மீதான விடயத்திலேயே இப்போது வழக்கு இழுபடுகின்றது. இன்னமும் மூல வழக்கின் விடயத்துக்குள் விசாரணை புகவில்லை.

கட்சியின் அங்கத்தினர் எவரும் இந்த வழக்கில் எதிராளிகளாகத் தங்களை இணைக்க விரும்பினால் அதற்காக நீதிமன்றம் ஏற்கனவே கால அவகாசம் வழங்கி இருந்தது. இப்படி வழங்கிய காலத்தின் பின்னர் தாக்கல் செய்யப்பட்ட ஓர் இடையீட்டு விண்ணப்பம் நீதிமன்றத்தினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது. இப்போது இன்னொன்று வந்துள்ளது. இப்படி ஒவ்வொரு விண்ணப்பத்தின் பெயரிலும் ஆட்சேபனைகள், விசாரணைகள் போன்றவற்றுக்குக் கால அவகாசம் வழங்கி, காலத்தை இழுத்தடிக்க இடம் அளிக்க முடியாது என்று சுமந்திரன் நீதிமன்றத்தில் நேற்று சுட்டிக்காட்டினார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக புதிதாக பொறுப்பேற்றுள்ள க.ஜீவராணி முன்னிலையில் இந்த வழக்கு இப்போது முதல் தடவையாக எடுத்துக் கொள்ளப்பட்டமையால் வழக்கின் விடயங்கள் தொடர்பில் மன்றில் புதிதாக விளக்கம் அளிக்க வேண்டிய நிலைமை இருந்தது.

கட்சியின் தலைமைப் பதவியைப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள சீ.வி.கே. சிவஞானம், முன்னைய தலைவருக்குப் பதிலாக - பதில் எதிராளியாக - ஏற்றுக் கொள்ளப்பட்டு, நேற்று அவர் தன்னுடைய பதில் மனுவை தாக்கல் செய்தார். அதை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

எனினும் இடையீட்டு எதிராளியாகப் புகுவதற்கு விண்ணப்பம் செய்துள்ள பரமானந்தனின் மனு தொடர்பில் ஏனைய எதிராளிகள் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்வதற்காக வழக்கை நவம்பர் 25ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்தது.

அந்தத் திகதியில் வழக்கு அழைக்கப்படும் போது இடையீட்டு எதிராளியின் விண்ணப்பம் தொடர்பான விடயத்தை விசாரணை செய்வதற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் நிர்ணயிக்கப்படும் அந்த திகதியில் அது குறித்து விசாரித்து, அந்த விசாரணை பற்றிய விவகாரம் ஒரு முடிவுக்கு வந்த பின்னரே, மூல வழக்குத் தொடர்பான விவகாரத்துக்குள் நீதிமன்றம் புகும்.

அந்த இடையீட்டு எதிராளியின் விண்ணப்பத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அவரையும் ஓர் எதிராளியாக நீதிமன்றம் சேர்த்துக் கொண்டால் அதன் பின்னர் மூல வழக்குத் தொடர்பில் அவர் பதில் மற்றும் ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய அவருக்கும் தனியாக கால அவகாசம் வழங்க வேண்டியிருக்கும்.

ஆக, இந்த வழக்கு இன்னும் ஆண்டுகள் கடந்து நீடிப்பதற்கான வாய்ப்புகள்தான் தொடர்ந்து தென்படுகின்றன.

அதுதான் நிலைமை என்றால், தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு இப்போதைக்கு நடைபெறாது. இப்போதைய நிர்வாகிகள் தொடர்ந்து கட்சியை நடத்திக் கொண்டு போக வேண்டியதுதான்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கு எதிராக லஞ்ச, ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பாக முறைபாட்டாளரிடம் மேலதிக ஆவணங்கள், விவரங்கள் கேட்டு ஆணைக்குழு கடிதம் எழுதி இருப்பதாக தகவல் வந்திருக்கின்றது.

சிறிதரன் விடயத்தில் விசாரணைக்காக ஒரு கோவை ஆணைக் குழுவில் திறக்கப்பட்டு இருப்பதை அறிய முடிகின்றது.

அதேசமயம் அந்த விடயத்துக்கான மேலதிக ஆவணங்கள், ஆதாரங்கள், சான்றுகள், தகவல்களை சமர்ப்பிக்குமாறு முறைப்பாட்டாளரிடம் ஆணைக்குழு கோரி இருக்கின்றது.

முறைப்பாட்டாளரான சஞ்சய் மாவத்தஹே என்பவரிடம் இருந்து இது தொடர்பான விவரங்களை கோரி ஆணைக்குழு கடிதம் ஒன்றை அண்மையில் அனுப்பி வைத்திருப்பதாக அறிய வந்தது.

'நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனுக்கு சொந்தமான மதுபான உரிமங்கள் மற்றும் சட்டவிரோத சொத்துக்கள்' - என்ற தலைப்பில் இந்தக் கடிதம் ஆணை குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் என்ன ஆதாரங்கள், சான்றுகள், ஆவணங்களைச் சமர்ப்பிக்கப் போகின்றார் என்பதை பார்த்திருக்கலாம். ஆயினும் இந்த விடயத்துக்காக ஆணைக் குழுவில் ஒரு விசாரணைக்கு கோவை திறக்கப்பட்டு இருப்பது முக்கிய அம்சமாகும்.

★ ★ ★

முன்னைய அரசுத் தலைவர்கள், அவர்களின் பரிவாரங்கள், அரசியல்வாதிகள் போன்றோருக்கு எதிரான ஊழல், முறைகேடுகள், லஞ்சக் குற்றச்சாட்டுக்கள், மோசமான நிர்வாக நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் விசாரித்து தீவிர நடவடிக்கை எடுப்போம் என தேசிய மக்கள் சக்தி அரசு கங்கணம் கட்டி நிற்பதையொட்டி அரசியல்வாதிகள், முன்னாள் அரசுத் தலைவர்கள் கலங்குகின்றார்களோ இல்லையோ ஏற்கனவே உயர் பதவிகளில் இருந்த அதிகாரிகள் கலங்கிப் போய் இருக்கிறார்கள் என்பதுதான் இப்போதைய நிலைமை.

அதுவும் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னரே சேவையை முடித்து, ஓய்வு பெற்று, வீட்டில் நிம்மதியாக இளைப்பாறும் காலத்தை கழித்துக் கொண்டிருக்கும் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராகவும் கெடுபிடி பாய்வதால் ஓய்வில் இருக்கும் பலரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு அச்சத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

பொலிஸ், முப்படைகள், சிறைச்சாலைகள் துறை, இலங்கை சுங்கம், குடிவரவு மற்றும் குடிவரவுத் துறை உள்ளிட்ட பல முக்கிய அரசு நிறுவனங்களில் மூத்த அதிகாரிகளின் சொத்துக்கள் குறித்து விரிவான விசாரணையைத் தொடங்க இலஞ்ச ஒழிப்பு அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிறுவனங்களில் பணியாற்றும் சில அதிகாரிகள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுக்களுடன் நேரடி தொடர்புகளைப் பேணினர் என்றும் சந்தேகிக்கப்படுகிறார்களாம்.

இந்தச் செயல்முறையின் ஆரம்ப கட்டத்தில், விசாரணையை ஜூனியர் பதவிகளுக்கு விரிவுபடுத்துவதற்கு முன்பு, பொலிஸ் மற்றும் முப்படைகளில் உள்ள மூத்த அதிகாரிகளின் சொத்து கோப்புகளை ஆணையம் ஆய்வு செய்கின்றது என்றும் கூறப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 50 நெல் களஞ்சியசாலைகளுக்குச் சட்டவிரோதமாகப் பொருகளை இறக்குமதி செய்து அரசாங்கத்துக்கு 9 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகருமான சரித ரத்வத்தே இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்.

பணி இடை நிறுத்தம் செய்யப்பட்ட ரயில்வே சாரதி ஒருவரை பல ஆண்டுகளுக்கு முன்னர் முறையற்ற விதத்தில் மீளச் சேவைக்குச் சேர்த்துக் கொண்டார் என்ற குற்றச்சாட்டில் ரயில்வே திணைக்களத்தின் முன்னாள் பொது முகாமையாளர் ஒருவர் ஓய்வின் பின் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இவ்வாறு பல அதிகாரிகளுக்கு ஓய்வின் பின்னர் கம்பி எண்ண வேண்டிய நிலைமை காத்திருப்பதாக இப்போது தெரிகிறது.

அரசியல்வாதிகளை மடக்க முடியாத அரசு, அவர்களின் போடுதடிகளாக செயல்பட்ட அதிகாரிகளை இலக்கு வைக்கின்றது.

எய்தவரை நோக வக்கற்ற அரசு அம்பை நோகின்றது. அவ்வளவுதான்...! பாவம் அதிகாரிகள்...!

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

சடலத்தின் கழுத்துப் பகுதியில் கூரிய ஆயுதத்தால் வெட்டப்பட்டமையால் மரணம் நிகழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதேவேளை, பெண்ணின் கணவர், அவரது இரண்டு வயது பெண் குழந்தையுடன் தலைமறைவாகியுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பாதாளக் குழு உறுப்பினர் ‘குடு சலிந்து’வின் இரு சகாக்கள் போதைப்பொருளுடன் கைது!

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ‘குடு சலிந்து’ என அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக குணரத்ன என்பவரின் சகாக்கள் இருவர் களுத்துறை பிரதேசத்தில் வைத்து வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

வலான ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பண்டாரகமை பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய பெண்ணும், தியகம பிரதேசத்தில் வசிக்கும் 29 வயதுடைய ஆணுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 301 கிராம் 580 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 250 கிராம் 490 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், ஆணிடமிருந்து 25 கிராம் 740 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் ‘குடு சலிந்து’ என்பவருக்குச் சொந்தமான போதைப்பொருட்களை விற்பனை செய்து வந்துள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வலான ஊழல் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# மோ. சைக்கிளும் பஸ்ஸும் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்!



மோட்டார் சைக்கிளும் பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க் கிழமை மித்தெனிய – வலஸ்முல்ல வீதியில் கரமெட்டிய பகுதியில் இடம் பெற்றுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் படுகாயமடைந்து சம்பவ இடத் திலேயே உயிரிழந்துள்ளார்.

24 வயதுடைய இளைஞரே இதன் போது உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுர அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, “அநுர அரசுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி நுகேகொடையில் நடைபெறவுள்ள பேரணியில் நாங்கள் பங்கேற்போம். ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சகல எதிர்க் கட்சிகளுக்கும் உண்டு.

அரசின் போலியான வாக்குறுதிகளால் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த அரசியல் கட்சிகள் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அரசியல் கொள்கை வேறுபாடு என்று குறிப்பிட்டுக் கொண்டு பேரணியில் கலந்துகொள்ளாமல் இருப்பது முறையற்றது.

அநுர அரசின் அனுசரணையுடன்தான் பாதாளக் குழுக்கள் இயங்குகின்றன. இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்படுபவர்கள் அனைவரும் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு என்று குறிப்பிடுவது அரசின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது. பாதாளக் குழுக்கள் இந்த அரசின் கட்டளைக்கமையச் செயற்படுகின்றன. அரசு குறிப்பிடும்போது துப்பாக்கிச்சூடுகள் இடம் பெறுகின்றன.

பாதாளக் குழுக்களுக்கு இடையிலான மோதலின் காரணமாகவே துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிடுவது தேசிய பாதுகாப்பின் பலவீனத்தையே வெளிப்படுத்துகின்றது.” – என்றார்.

## தென்மராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 3 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயினைத் தனது உடமையில் வைத்திருந்த வரணிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மருத்துவ சேவை நிர்வாகம்

தெய்வீகப் பணி எனப் போற்றப்படுவது மருத்துவ சேவை. வைத்தியர்களைக் கடவுள் அவதாரங்களாக மதிப்பது நமது மரபு. பண்பியல்பு. அத்தகைய மருத்துவத் துறை தொடர்பில் - அந்தத் துறையினாரல் நாட்டுக்கு ஏற்படுத்தப்பட்டு வரும் இழப்புகள் தொடர்பில் - இப்போது விவரமாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

பெருந்தொகை அரச செலவில் மருத்துவக் கல்வியைக் கற்ற நூற்றுக் கணக்கான அரசு மருத்துவர்கள் தங்கள் பதவிகளை இடைநடுவில் கைவிட்டும், வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை இடையில் துறந்தும், விலகிச் செல்கின்றமையால் வரி செலுத்துவோரின் பில்லியன் கணக்கான ரூபா பணம் வீணாகியுள்ளது.

ஒரு சிறப்பு கணக்காய்வு அறிக்கையில் இவ்விடயம் வெளியாகியுள்ளது. அரசு சேவையை விட்டு வெளியேறும் மருத்துவர்கள் பலர், அவர்களின் நிதிக் கடமைகளைத் தீர்க்காமல் வெளிநாடுகளுக்குச் செல்வது அல்லது முதுகலை படிப்பைத் தொடர்வது போன்றவை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக அறிக்கை கண்டறிந்துள்ளது. 2020 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் இது மிகவும் பரவலாக இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறைந்த ஊதியம், அதிக வரிகள், வரையறுக்கப்பட்ட தொழில் வாய்ப்புகள், மோசமான பணி நிலைமைகள், மருத்துவமனைகளில் குறைந்த வளங்கள், உபகரணங்கள் மற்றும் ஊழியர்கள், அரசியல் ஸ்திரமின்மை மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லாதமை உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் இலங்கையில் மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தொடங்கினர் என்றும் கூறப்படு கின்றது.

இது சுகாதாரத் துறைக்கு ஒரு பெரிய அடியாகக் கருதப்பட்டது, இதன் சுமையைப் பொதுமக்கள் தாங்க வேண்டியிருந்தது. 2024 க்குப் பிறகு இந்தப் போக்கு சற்றுத் தளர்வடையத் தொடங்கிய போதிலும், இந்தத் துறையில் அதன் தாக்கம் மிகப்பெரியதாகவே உள்ளது என்றும் சுட்டப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புகளின் படி, 2015 முதல் ஒப்பந்தங்களை மீறிய 705 மருத்துவ அதிகாரிகள் 115 கோடி ரூபா அரசுக்குக் கடன்பட்டுள்ளனர். அதே நேரத்தில் கணக்காய்வுக்குத் தனிப்பட்ட கோப்புகளை சமர்ப்பிக்காத 116 அதிகாரிகளிடமிருந்து 119 மில்லியன் ரூபா நிலுவையில் உள்ளது.

பாதுகாப்பு வைப்புத்தொகை மற்றும் அபராதங்களை சரியான நேரத்தில் வசூலிக்கத் தவறியமை மற்றும் அதிகாரிகளின் திறமையின்மை போன்ற காரணிகளினால் இந்த நிலைமை என்கின்றது அறிக்கை.

மேலும், 68 மருத்துவ அதிகாரிகள் அரசாங்கத்தால் அவர்களுக்கு நிதியளிக்கப்பட்ட முதுகலைப் பட்டங்களை முடிக்கத் தவறிவிட்டனர். இதனால் மில்லியன் கணக்கான பொது நிதி வீணடிக்கப்பட்டது, மேலும் 71 பேர் பயிற்சியை முடிக்கவில்லை அல்லது பணிக்குத் திரும்பவில்லை.

நிபுணர் நியமனங்களின் தவறான மேலாண்மை, மோசமாகப் பராமரிக்கப்படும் தனிப்பட்ட கோப்புகள் மற்றும் அரசாங்க சொத்துக்கள் திரும்புவதை உறுதி செய்வதற்கான அமைப்புகள் இல்லாதமை ஆகியவற்றையும் கணக்காய்வு சுட்டிக் காட்டியது.

இலங்கையின் மருத்துவ சேவை நிர்வாகம் குழப்பத்தில்தான் உள்ளது என்பதைத்தான் இந்தக் கணக்காய்வு அறிக்கை அம்பலப்படுத்துகின்றது.

# சரித ரத்வத்தே பிணையில் விடுவிப்பு!

நிதி அமைச்சின் முன்னாள் செயலாளரும் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் சிரேஷ்ட ஆலோசகருமான சரித ரத்வத்தேவைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று மாலை உத்தரவிட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டில் பிரதமராக இருந்த காலத்தில் அவரது சிரேஷ்ட ஆலோசகராக சரித ரத்வத்தே பணியாற்றியுள்ளார்.



2015 ஆம் ஆண்டில் இலங்கை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக 50 நெல் களஞ்சியசாலைகளுக்குச் சட்டவிரோதமாகப் பொருட்களை இறக்குமதி செய்து அரசாங்கத்துக்கு 9 கோடி ரூபா நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் சரித ரத்வத்தே இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று காலை கைது செய்யப்பட்டிருந்தார்.

# உடுவில் பகுதியில் குடும்பஸ்தர் கிணற்றில் வீழ்ந்து உயிர்மாய்ப்பு

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

உடுவில், மல்வம் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்த நபர் இதற்கு முன்னரும் ஒரு தடவை உயிர்மாய்க்க முயற்சித்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் கிணற்றில் வீழ்ந்து உயிர்மாய்த்துக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளைச் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# விசேட அதிரடிப் படையணிக்கு வாகனங்கள் கொள்வனவு செய்ய அமைச்சரவை அனுமதி

விசேட அதிரடிப் படையணிக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 50 முச்சக்கர மோட்டார் ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று செவ்வாய்க்கிழமை ஊடக அமைச்சில் இடம்பெற்றது. இதன்போதே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையின் கீழ் நாடளாவிய ரீதியில் 76 பிரதான முகாங்களும், 23 உப முகாங்களும் மற்றும் 14 விசேட பிரிவுகளும் செயற்பட்டு வருகின்றன.

இந்தப் படையணிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள 314 மோட்டார் சைகக்கிள்களில் 90 சதவீதமானவை 10 வருடங்களுக்கு மேல் பழையவையாக இருக்கின்றமையால் தொடர்ச்சியாக இயந்திரக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

இந்நிலைமையால் விசேட அதிரடிப் படையால் மேற்கொள்ளப்படுகின்ற விசேட சுற்றிவளைப்புக்களைச் சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு தடையாக அமைந்துள்ளன.

அதற்கமைய, போதைப்பொருள் தடுப்பு மற்றும் அமைப்பு ரீதியான பாதாள உலகக் குழுக்களை ஒழித்தல் போன்ற கடமைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் விசேட அதிரடிப் படையணிக்கு 100 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 50 முச்சக்கர மோட்டார் ஊர்திகளைக் கொள்வனவு செய்வதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்வழங்கியுள்ளது.



# ஊசலாடும் பாடசாலை நேரமாற்றம் வெள்ளி வரைதான் கால அவகாசம்!

## அந்தத் திட்டம் நடைமுறைக்கு வருமா?

இலங்கையில் பாடசாலை நேர மாற்றம் அல்லது நேர நீடிப்பு என்பது இன்று ஊசலாடும் நிலைக்கு வந்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே வேளை -

அரசாங்கம் பாடசாலை நேர நீடிப்பை வாபஸ் பெற வேண்டும். இன்றேல் தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டி நேரிடும் என அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்து ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை வரை கால அவகாசம் கொடுத்துள்ளன.

பொதுவாக நோக்கினால் பாடசாலை நேரத்தை அரை மணிநேரம் அதிகரித்தால், முழுக் கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அவற்றை முறையாக நடைமுறைப்படுத்தவும் வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

அண்மையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்ட பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய சென்ற இடமெல்லாம் கல்விச் சீர்திருத்தம் மற்றும் பாடசாலை நேர மாற்றம் தொடர்பிலேயே உரையாற்றியிருந்தார்.



வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா
(காரைதீவு)

குறிப்பாகப் பாடசாலை நேர மாற்றம் தொடர்பில் எவ்வித பிரச்சினைகளும் தோன்றவில்லை என் பிரதமர் கூறியிருந்தார். மறுகணம் தொழிற்சங்கங்கள் அதற்கு பதிலாக நாம் எழுத்து மூலம் அரசுக்கு தெரிவித்துள்ளோம் என்று தெரிவித்துள்ளன.

இந்த நிலை ஆரோக்கியமான ஒன்றல்ல.

அரசும் தொழிற்சங்கங்களும் விடாக்கொண்டன் கொடாக்கண்டன் நிலையில் இருந்து விடுபட்டு இதற்கு நியாயமான தீர்வு காண வேண்டும்.

பாடசாலை என்பது தனி ஒரு கல்விச் சமூகத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. பல சமூகங்களுடன் தொடர்புபட்டது. கல்வி அமைச்சு, போக்குவரத்து துறை என்பவை மட்டுமல்ல, குடும்பம் என்பதால் சகல துறைகளிலும் சம்பந்தப்பட்டது பாடசாலை ஆகும்.

எனவே,அரசு கல்விச் சமூகம் மற்றும் பாடசாலை சார்ந்த சமூகங்கள் எதிர்நோக்கும் சவால்களை கருத்திற்கொண்டு முறையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

### அரசின் தீர்க்கமான முடிவு

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையிலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

“நாங்கள் நிபுணர்கள் அல்லர்; தேசிய கல்வி நிறுவனமே சீர்திருத்தங்களை வடிவமைக்கும். அதன் கொள்கைகளை மாற்ற முடியாது. ஏற்கனவே செலவு ஒதுக்கப்பட்டுள்ளது.” என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவேவ தெரிவித்துள்ளார்.

முதலில் ஒரு பாட நேரத்தை ஒரு மணிநேரமாக நீடிக்கவிருந்தது. ஆனால், ஒரு பாட நேரம் 50 நிமிடங்களாகக் குறைக்கப்பட்டது. இதன் காரணமாகவே பாடசாலை நேரத்தை பிற்பகல் 2 மணி வரை நீடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சீர்திருத்தங்கள் தேசிய கல்வி நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி செயல்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது பிற்பகல் 1.30 மணி வரை இருக்கும் பாடசாலை நேரம், இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 2.00

தொடர்ச்சி▼



# ஊசலாடும் பாடசாலை நேரமாற்றம் வெள்ளி வரைதான் கால அவகாசம்!

**தொடர்ச்சி▲**

மணி வரை (30 நிமிடங்கள் அதிகரிப்பு) நீட்டிக்கப்படவுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இந்த புதிய கால அட்டவணையை எதிர்த்து வருகின்றன. எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதிக்குள் அரசாங்கம் முன்மொழியப்பட்ட கால அட்டவணையைத் திருத்தாவிட்டால், புதிய பாடசாலைப் பருவம் தொடங்கும் போது ஒரு நாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போகிறார்கள் என அவர்கள் எச்சரித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாதக பாதகங்கள்

பாடசாலை நேரத்தை அரசு அரை மணிநேரம் அதிகரித்து பிற்பகல் 2 மணிவரை நீடிக்க உள்ளது. இந்நிலையில் இந்த அரை மணிநேர நீடிப்பால், பல துறைகளைச் சேர்ந்தவர்களும் கடுமையான சிரமங்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

பாடசாலைகளுக்குச் சென்று திரும்புவதற்கு பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துவோர், பாடசாலை வாகனங்களைப் பயன்படுத்துவோர் மேலதிகமாக அரை மணிநேரம் காத்திருக்க வேண்டும். வேலைக்குச் செல்லும் பெற்றோர்கள் என்றால், தங்களுடைய மதிய உணவு நேரத்தில் பிள்ளை வீட்டுக்கு அழைத்துச் சென்று விடுதல் பாதிக்கப்படும்.

அதுமட்டுமன்றி, ரயில்களில் பயணிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஆகையால்தான், போக்குவரத்துக்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுமாறு நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுக்கு கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், பாடசாலை நேரத்தை 30 நிமிடங்கள் நீடிக்க நடவடிக்கை எடுத்தால், அதற்கான நியாயமான சம்பள உயர்வும் வழங்கப்பட வேண்டும் என்று ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர்.

தற்போதைய பாடசாலை நேரம் நீடிக்கப்படும் என்று கூறுவதன் மூலம், அவர்களுக்கு அதிக கடமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கப்படும் என்று சுட்டிக்காட்டும் ஆசிரியர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் நியாயமாக நடத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

“கற்பித்தல் நேரத்தை நீட்டிப்பதன் மூலம் முன்மொழியப்பட்ட திட்டத்தின் மூலம் அவர்கள் சில உற்பத்தித்திறனை எதிர்பார்க்கிறார்கள். பாடசாலை நேரம் ஒரு நாளைக்கு முப்பது நிமிடங்கள் நீட்டிக்கப்படும் என்று கூறுவதன் மூலம், ஆசிரியர்கள் மாதத்திற்கு இருபது

சேவை நாள்களை உள்ளடக்கும் போது மாதத்திற்குக் கூடுதலாக பத்து மணிநேரம் வேலை செய்ய வேண்டியிருக்கும். இந்த வழியில், இது ஆசிரியர்களின் சம்பளத்தில்

நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்.” என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

அதுமட்டுமன்றி, பாடசாலை நிறைவடைந்து, மேலதிக வகுப்புகள், தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகையால், பாடசாலை நிறைவடைந்து, இன்னும் இரண்டொரு மணிநேரத்துக்குப் பின்னரான பயண ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வகையில் போக்குவரத்தை மறுசீரமைக்கவேண்டும்.

இதேவேளை, பெரும்பாலான அரச பேருந்துகள், சீருடைகளில் நிற்கும் மாணவர்களை ஏற்றிச் செல்வதில்லை. அத்துடன், பல தூரபிரதேசங்களில் அரச பேருந்து போக்குவரத்து ஒழுங்குமுறையில் இல்லை என்ற குற்றச்சாட்டுகளும் உள்ளன.

குற்றச்சாட்டுகள் என்பதை விட, அதுதான் உண்மையாகும். ஆகையால், அந்தப் பிரச்சினையையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

வருவது உயர்தர பரீட்சை. அடுத்து ஜனவரியில் பாடசாலைகள் ஆரம்பமாகும்.

எனவே அரசாங்கம் விரைந்து தீர்வு காண வேண்டும் என்பதே பலரதும் எதிர்பார்ப்பு ஆகும்.

# நிமோனியா தொற்று காரணமாக சுன்னாகத்தில் ஒருவர் உயிரிழப்பு

கந்தரோடை சுன்னாகம் பகுதியில் வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் உயிரிழப்பிற்கு நிமோனியா தொற்று காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியைச் சேர்ந்த கதிரமலை விக்னேஸ்வரன் (வயது 50) என்ற ஒரு பிள்ளையின் தந்தையாரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

வீட்டின் ஐந்தடி உயரமான ஒட்டில் திங்கள் கிழமை இரவு அவர் படுத்திருந்த போது விழுந்து உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டார்.



சம்பவ இடத்திற்கு நேற்று சென்ற யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.சாட்சிகளை சுன்னாகம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மணல்பிட்டி காரைநகரைச் சேர்ந்த கந்தசாமி சிறிஸ்கந்தநாதன் (வயது 61) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

கடந்த முதலாம் திகதி பிற்பகல் மாடு அவிழ்க்க வீதியால் நடந்து சென்ற போது குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் வலந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் திங்கள் கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை காரைநகர் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு 340,525 பேர் விண்ணப்பிப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு 3 லட்சத்து 40 ஆயிரத்து 525 பரீட்சாத்திகள் விண்ணப்பித்துள்ளனர். இம்முறை நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 362 பரீட்சை நிலையங்களும் நிறுவப்படவுள்ளன என பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ்.இந்திகா குமாரி லியனகே தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பரீட்சை திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

“கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகி, டிசம்பர் 5ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. 246,521 பரீட்சாத்திகள் பாடசாலை ஊடாகவும், 94,004 பரீட்சாத்திகள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர். அதற்கமைய ஒட்டுமொத்த விண்ணப்பதாரர்கள் எண்ணிக்கை 340,525 ஆகும்.

மேலும் நாடளாவிய ரீதியில் 2,362 பரீட்சை நிலையங்களும் நிறுவப்படவுள்ளன.

பாடசாலை ஊடாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர்களுக்கான பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன. எனினும் இதுவரையிலும் அனுமதிப்பத்திரங்கள் கிடைக்காதவர்கள் பரீட்சை திணைக்களத்தின் இணையதளத்தில் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.” – என்றார்.

### தலவாக்கலை நகரில் தீபாவளி தினத்தன்று நடந்த

# விபத்தில் காயமுற்ற இளைஞன் மரணம் பிணை பெற்ற சாரதிக்கு விளக்கமறியல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை நகரில் தீபாவளி தினத்தன்று அதிகாலை வேளையில் தலவாக்கலை நகர மத்தியில் பட்டாசுகளை கொளுத்திக்கொண்டிருந்த போது இரண்டு இளைஞர்கள் மீது கெப்ரக வாகனமொன்றில் மோதி சென்ற சாரதியை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதிபதி உத்தரவிட்டுள்ளார் எனத் தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை நகரில் தீபாவளி தினத்தன்று அதிகாலை வேளையில் தலவாக்கலை நகர மத்தியில் பட்டாசுகளை கொளுத்திக்கொண்டிருந்தபோது கெப்ரக வாகனமொன்றினால் மோதி இழுத்துச் செல்லப்பட்டு ஆபத்தான நிலையில் நுவரெலியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப்பெற்று வந்த இளைஞன் சிகிச்சைப் பலனின்றி கடந்த உயிரிழந்தார். சென்கிளையார் ரயில்வே விடுதியைத் தற்காலிக வசிப்பிடமாக கொண்ட செல்வநாதன் புஸ்பகுமார் (வயது 28) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனுக்கு நீதி கோரியும் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட சாரதியை மீண்டும் கைது செய்யுமாறுகோரியும் 100 இற்கும் அதிகமான இளைஞர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான சாரதி நேற்று முன்தினம் தலவாக்கலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நுவரெலியா நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது சந்தேக நபரை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார் எனத் தலவாக்கலைப் பொலிஸார் தெரிவித்தனர்.




- ஜிந்துயா விஜயகுமார் -

# உலக சுனாமி விழிப்புணர்வு தினம் இலங்கைக்குச் சொல்லும் பாடம் என்ன?

உலகளாவிய ரீதியில் சுனாமி விழிப்புணர்வு தினம் நவம்பர் 5 ஆம் திகதி ஆண்டுதோறும் அனுசரிக்கப்படும் வேளையில், சுனாமியின் அபாயங்கள் குறித்து நாம் மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டியது மிகவும் அவசியம்.

உலகளவில் கடந்த 100 ஆண்டுகளில் 260,000 இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டு, 200 பில்லியன் டொலருக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்திய இந்தக் கோர நிகழ்வுகள், நாம் எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை நொடிக்கொருமுறை உணர்த்திக் கொண்டே இருக்கின்றன.

எதிர்காலத்தில் கடலோரப் பகுதிகளில் மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவற்றின் காரணமாக சுனாமி இழப்புகள் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கப்படும் நிலையில், சுனாமி தொடர்பான விழிப்புணர்வானது மிகவும் அவசியமாகின்றது.

இலங்கையை பொறுத்தவரையில் சுனாமி என்பது மக்கள் மனதில் ஆறாத வடுவாக பதிந்துள்ளது. அதாவது டிசெம்பர் 26, 2004 அன்று இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தால் ஏற்பட்ட ஆறாத காயங்களின் நினைவுத் தொகுதியாகவே பார்க்கப்படுகின்றது.

சுமத்ரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கம், இரண்டே மணி நேரத்தில் இலங்கையின் கரையோரப் பகுதிகளைத் தாக்கி, உத்தியோக பூர்வமாக சுமார் 31,000 இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டது. குறிப்பாக, கிழக்குப் பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒரு சில நிமிடங்களில் காவு கொள்ளப்பட்டனர். தனது ஒரு வயதுக் குழந்தையை இழந்து, அதன் துயரம் இன்றும் நீங்காதிருக்கும் தாயின் கண்ணீர், கடற்கரையில் நடைபயிற்சிக்குச் சென்று காணாமல் போனவர்களின் சோகம், தமது உறவுகளை இழந்த ஆயிரக்கணக்கானோரின் பரிதவிப்புக்கள் என இவை அனைத்தும் புள்ளிவிவரங்களுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிப் பதிவுகளாக இடம் பிடித்தன.

இலங்கையில் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் கொடூரமான தாக்குதலினால் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்தன. பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், மீன்பிடி உபகரணங்கள் என கரையோர மக்களின் வாழ்வாதாரமே தரைமட்டமானது. இது வெறும் கட்டட இழப்பு அல்ல. இது கடலோர சமூகங்களின் முழுமையான பொருளாதார வீழ்ச்சியின் சாட்சியங்களாகும்.

இதொருபுறமொன்றால் இன்றும்கூட, கடற்கரையில் ஏற்படும் ஒரு சிறிய அலை மாற்றம் கூட பல கடலோர மக்களின் மனதில் பயம் மற்றும் பதற்றத்தை ஏற்படுத்துகிறது. இதுவே சுனாமி விட்டுச் சென்ற மிகப்பெரிய உளவியல் வடுவாகக் காணப்படுகின்றது.

2004 ஆம் ஆண்டு சுனாமி ஏற்பட்ட போது, இலங்கையில் திறமையான தேசிய முன்னெச்சரிக்கை அமைப்பு இருக்கவில்லை. சரியான நேரத்தில் தகவல் இல்லாததால் சுனாமியின் இழப்புகள் அதிகரித்தன. ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் (Disaster Management Centre - DMC) நிறுவப்பட்டு, சுனாமி போன்ற அரிய பேரழிவுகளுக்கான முன்னெச்சரிக்கை அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால், இந்த அமைப்புகள் மட்டும் போதுமா? நாம் விழிப்புணர்வு தினத்தோடு நின்றுவிடாமல், உண்மையான தயார் நிலையை உறுதி செய்ய வேண்டும்.

அந்தவகையில் தேசிய முன்னெச்சரிக்கை அமைப்பிலிருந்து வரும் தகவல்கள், இறுதிக் கட்டத்திலுள்ள சாதாராண மக்களிடம் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும். வருடாந்திர வெளியேற்ற ஒத்திகைகள் (Evacuation Drills), குறிப்பாகச் சுனாமி அபாயம் உள்ள கடலோரப் பகுதிகளில் தீவிரப்படுத்தப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டால், கடலில் நீரின் மட்டம் திடீரெனக் குறைவதைக் கண்டால், உடனடியாக எங்குச் செல்ல வேண்டும், எப்படி உயரமான பகுதிகளை அடைய வேண்டும் (Get To u;igh Ground) போன்ற அடிப்படை அறிவு அனைவரிடமும் இருக்க வேண்டும்.

மேலும் கடலோரப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள், மருத்துவமனைகள் போன்ற முக்கியக்

தொடர்ச்சி▼



# உலக சுனாமி விழிப்புணர்வு தினம் இலங்கைக்குச் சொல்லும் பாடம் என்ன?

தொடர்ச்சி▲

கட்டடங்களை சுனாமியைத் தாங்கும் வகையில் வலுப்படுத்துவது அல்லது புதிதாகக் கட்டும்போது அதன் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியமாகின்றது.

2004 சுனாமி, இன, மத பேதமின்றி அனைவரையும் பாதித்தது. அந்தச் சமயத்தில் தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என அனைத்து சமூகங்களிடையேயும் காணப்பட்ட மனிதநேயமும் ஒருமைப்பாடும் மறக்க முடியாதவை. அந்தப் பேரழிவின் துயரமான பாடங்களை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தில், உயிரிழந்தவர்களை நினைவு கூர்வதுடன், "பாதுகாப்பான இலங்கை" என்ற இலக்கை அடையத் தேவையான தொடர்ச்சியான தயார்நிலை மற்றும் விழிப்புணர்வை உறுதி செய்ய நாம் அனைவரும் திறம்படச் செயற்பட வேண்டும்.





# கொழும்பில் இன்று பரதநாட்டிய அரங்கேற்றம்

அமிர்தாலயா நடனப்பள்ளியின் நிறுவுநர் நாட்டிய கலைமணி ஸ்ரீமதி சர்மிளா தேவி சுந்தரின் மாணவியும் திரு. திருமதி சதாநந்தன் குமுதினி தம்பதியின் புதல்வியுமான செல்வி சங்சனாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலபிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எஸ். துரைராஜா, கௌரவ விருந்தினர்களாக ஆஹாஸ் நிறுவனரும் கொழும்பு கேம்பிரிட்ஜ் பாடசாலையின் இயக்குனருமான பிரதீப் குமார் முத்துசாமி, புத்தசாசன மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கலாச்சார மேம்பாட்டு இயக்குநர் டாக்டர். பிரசாத் ரணசிங்க ஆகியோரும், காட்சி மற்றும் நிகழ்த்து கலை பல்கலைக் கழகத்தின் இந்திய மற்றும் ஆசிய நடனத் துறை, நடனம் மற்றும் நாடக பீடத்தின் டாக்டர். பாலிகா சமந்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.









# பொருளாதார ஸ்திரத்தன்மை, தேசிய ஒற்றுமைக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு வத்திக்கான் பாராட்டு

இலங்கை அரசாங்கம் நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, நாட்டை மீண்டும் இயல்புநிலைக்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சிகளை வத்திக்கான் பெரிதும் பாராட்டுவதாக, வத்திக்கானின் நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான உறவுகளுக்கான செயலாளர் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தைச் சீரமைக்கவும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்தவும் இலங்கை மேற்கொள்ளும் முயற்சிகளை வத்திக்கான் ஆதரிப்பதாகவும் அவர் உறுதி அளித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை உத்தியோகபூர்வமாகச் சந்தித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 50 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் பேராயர் இலங்கை விஜயம் செய்தமைக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இந்த அரை நூற்றாண்டு கால உறவு நாட்டிற்கு ஆன்மீக ரீதியாகவும், மனித கண்ணியத்தை மேம்படுத்துவதிலும் பிரதானமாக அமைந்ததாகக் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை பேரழிவுக்குப் பின்னரும், கல்வித் துறைக்கும் வத்திக்கான் வழங்கிய உதவிகளை ஜனாதிபதி நினைவுகூர்ந்தார்.

இதேவேளை, புனித திருத்தந்தை ஓஜஏ ஆவது லியோவின் உடல்நலம் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, விசாரித்தார்.

இந்தநிலையில், புனித திருத்தந்தை விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்துப் பரிசீலிப்பார் என்றும் பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர் குறிப்பிட்டார்.

பேராயர் போல் ரிச்சர்ட் கல்லாகர், எதிர்வரும் 8 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து, அனைத்துச் சமூகங்களிடையேயும் அமைதி மற்றும் பரஸ்பர புரிதலை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வலுப்படுத்தும் வகையில், 'வத்திக்கானின் தொலைநோக்கு, உரையாடல் மற்றும் அமைதிக்கான அர்ப்பணிப்பு' என்ற கருத்தரங்கிலும் பங்கேற்க உள்ளார்.





# ரூ. 30 லட்சம் பெறுமதி முதிரை மரக்குற்றிகள் தர்மபுரம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டன

(பூ.லின்ரன்)

30 லட்சம் ரூபாய் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் தர்மபுரம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பகுதியிலிருந்து கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் உள்ள மரத்தளபாட உற்பத்தி நிலையத்திற்கு எந்தவித அனுமதிப்பத்திரமும் இன்றிய நிலையில் கன்டர் ரக வாகனம் மற்றும் கப்ரக வாகனங்களில் முதிரை மரக்குற்றிகளை நேற்று அதிகாலை 2.00மணியளவில் கடத்தப்பட்டமையைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இரவுஇரண்டுமணிஅளவில்கொண்டு வரப்பட்ட முதிரை மரக்குற்றிகளை தமக்குக்கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக தர்மபுரம் பொலிஸார் வாகனத்துடன் மீட்டனர். மூன்று சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

சந்தேக நபர்களை இன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.















# பேசாலை மருத்துவமனக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு ரவிகரன் எம்.பி. வலியுறுத்தல்

## ஒரு வாரத்திற்குள் வழங்கப்படும் என சுகாதாரப் பணிப்பாளர் உறுதி

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் - பேசாலை பிரதேச வைத்தியசாலைக்கு உடனடியாக குடி தண்ணீர் வசதியை ஏற்படுத்துமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

ஒருவாரகாலத்திற்குள் அந்த வசதி ஏற்படுத்தப்படுமென மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பதிலளித்துள்ளார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று இடம்பெற்ற போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில் -

பேசாலை பிரதேச வைத்தியசாலையில் குடி தண்ணீர் வசதியில்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் வைத்தியர்கள், பணியாளர்கள், நோயாளர்கள் எனப் பலரும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கடந்த 14.10.2025அன்று பேசாலை வைத்தியசாலைக்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டிருந்தேன். அந்தக் குடி தண்ணீர்த் திட்டத்திற்கு ஒன்றரை லட்சம் ரூபா நிதியே தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அருகிலுள்ள பாடசாலைக்கும் முன்பு பேசாலை பிரதேச வைத்தியாசாலையிலிருந்தே குடி தண்ணீர் பெறப்பட்டு வந்த நிலையில் தற்போது வைத்தியசாலையிலும் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக எம்மிடம் முறையிடப்பட்டுள்ளது.

கடந்தகாலத்தில் மாவிலாறு பிரச்சினை ஏற்பட்டதே தண்ணீரால்தான் என்ற வரலாறு இருக்கும்போது, பேசாலை வைத்தியசாலையிலும் குடி தண்ணீர் நெருக்கடி பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடுமோ என்ற அச்சநிலையும் காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதற்குரிய பதிலை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இந்நிலையில் உரிய நடவடிக்கைகளை மேற்கெண்டு ஒருவாரத்திற்குள் குடி தண்ணீர் வழங்கப்படுமென மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பதிலளித்தார்.









# வடமேல் மாகாணத்தில் ஒரே நாளில் அடையாள அட்டை பெற சந்தர்ப்பம்

வடமேல் மாகாண மக்களின் வசதி கருதி, தேசிய அடையாள அட்டையை ஒரு நாளில் வழங்கும் சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆட்கள் பதிவுத் திணைக்களத்தின் மாகாண அலுவலகம் குருணாகலில் டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தச் சேவையின் மூலம், வடமேல் மாகாண மக்கள் இனிமேல் தேசிய அடையாள அட்டைக்காக கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்திற்குப் பயணிக்காது, குருணாகல் மாகாண அலுவலகத்திலேயே சில மணி நேரங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலி மற்றும் நுவரெலியாவில் ஏற்கனவே இந்த சேவை வெற்றிகரமாகச் செயற்படும் நிலையில், இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைத் திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் இது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரச துறையில் விரைவான, நம்பகமான சேவைகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை இது மேலும் பலப்படுத்துகிறது எனவும் எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களிலும் இதுபோன்ற அலுவலகங்கள் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# இலங்கையின் 4 பல்கலைகளுக்கு வெளிநாட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம்




இலங்கைப் பல்கலைக்கழகங்களை உலகத் தரப்படுத்தல் சுட்டிகளுக்கு மேம்படுத்துவதற்கும், சர்வதேசமயப்படுத்துவதற்கும் தேவையான உயர்கல்வி ஒத்துழைப்புக்களை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராகப் பிரதமரால் இந்த யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் சீனக் குடியரசின் சீன விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் புவியியல் மற்றும் புவி இயற்பியல் நிறுவகம் ஆகியவற்றுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலும் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

மேலும், மொரட்டுவ பல்கலைக்கழகமானது ஜப்பானின் யொகோஹோமா தேசிய பல்கலைக்கழகத்தின் பல்புலமை விஞ்ஞான நிறுவகம் மற்றும் டொகுயாமா பல்கலைக்கழகத்தின் தேசிய தொழிநுட்ப நிறுவகம் ஆகிய இரண்டுடனும் தனித்தனியாகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நான்கு ஒப்பந்தங்களும் 5 வருடங்களுக்குச் செல்லுபடியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# சாயி பாபாவின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு மத்திய கொழும்பு இந்து ம.வியில் கண் பரிசோதனை

சிறி சத்ய சாயி பாபாவின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு மத்திய கொழும்பு இந்து மகா வித்தியாலயத்தில் கொழும்பு முகத்துவாரம் தெற்கு லயன் கழகம் மற்றும் சாயி மத்திய நிலையத்தினுடன் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச கண் பரிசோதனை நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை காலை அதிபர் ப. பத்மரஞ்சன் தலைமையில் லயன் சர்வகுணதேவி சண்முகநாதன் ஏற்பாட்டில் நடைபெற்றது.



நிகழ்வில் பிரதம அதிதியாக லயன் மாவட்டம் 306 – டி தலைவர் லயன் பொஸ்கோ டி சில்வா, சிறப்பு விருந்தினராக சாயி மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம், செயலாளர் சிவா இராஜஜோதி, பிரதி அதிபர் கே. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் மாணவர்களுக்கான கண்பரிசோதனை நடைபெறுவதையும் ஆசிரியர்கள் மாணவர்களையும் காணலாம்.











# வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவைகள் விற்பனை நிலையம் திறப்பு

(கி.வசந்தன்)

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் கமநல சேவைகள் நிலையத்தின் விற்பனை நிலையம் நேற்றைய தினம் மாவட்ட செயலாளர் பி.ஏ.சரத்சந்திரவினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த கமநல சேவைகள் விற்பனை நிலையம், வவுனியா மாவட்ட விவசாயிகளின் நலனை அடிப்படையாகக் கொண்டு, குறைந்த விலையில் வவுனியா மாவட்ட மக்களிற்கு விளைபொரும்களை விற்பனை செய்யும் நோக்கிலே திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையிலேயே உள்ள பொருளாதார மத்திய நிலையங்களில் முதன் முறையாக வவுனியா மாவட்டத்திலேயே கமநல சேவைகள் விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.விமரூபன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், தேசிய இரசாயன உரச்செயலக பிரதிப்பணிப்பாளர் எஸ்.எம். பி.விஜயவர்த்தன, கமநல அபிவிருத்தி திணைக்கள மேலதிக ஆணையாளர் ஏ.எம். விக்ரமாராச்சி மற்றும் விவசாய சம்மேளனத் தலைவர், முக்கியஸ்தர்கள், வர்த்தக சங்கத் தலைவர், கமநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.







# பிஹாரில் தேர்தல் பிரசாரம் ஓய்ந்தது: 121 தொகுதியில் நாளை வாக்குப்பதிவு



பிஹாரில் முதல் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறை வடைந்தது. அந்த மாநிலத்தில் நாளை 121 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடை பெறுகிறது. பதற்றமான தொகுதிகளில் துணை இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

பிஹாரில் நவம்பர் 6, 11 ஆகிய திக திகளில் 2 கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் எதிர்க்கட்சிகளின் மெகா கூட்டணிக்கும் இடையே நேரடி மோதல் நிலவுகிறது. பிஹாரில் மொத்தம் 243 தொகுதிகள் உள்ளன. ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியில் ஐக்கிய ஜனதா தளம், பா.ஜ.க. தலா 101 தொகுதிகள், லோக் ஜன சக்தி – ராம் விலாஸ் – 29, ராஷ்டிரிய லோக் மோர்ச்சா 6, இந்துஸ் தானி அவாமி மோர்ச்சா 6 தொகுதி களில் போட்டியிடுகின்றன.

மெகா கூட்டணியில் ராஷ்டிரிய ஜனதா தளம் 143, காங்கிரஸ் 61, இந்திய கொம் யூனிஸ்ட் – எம்எல் 20, வி.ஐ.பி. 15, இந் திய கொம்யூனிஸ்ட் 9, மார்க்சிஸ்ட் 4 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன. தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ், ஓவைசி யின் ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சி, பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சி கள் தனித்தனியாக போட்டியிடுகின் றன.

மாநிலத்தில் மொத்தம் 7.43 கோடி பேர் வாக்குரிமை பெற்றுள்ளனர். இதில் 3.92 கோடி பேர் ஆண்கள். 3.51 கோடி பேர் பெண்கள். முதல்கட்டமாக 121 தொகுதிகளுக்கு நாளை வாக்குப்ப திவு நடைபெற உள்ளது. இந்த தொகு திகளில் நேற்று மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது. இறுதிக் கட்டமாக பிரதமர் நரேந்திர மோடி, ஆர்.ஜே.டி. தலைவர் லாலு பிரசாத், ஆர்.ஜே.டி. மூத்த தலைவர் தேஜஸ்வி யாதவ் உள்ளிட் டோர் நேற்று பல்வேறு பகுதிகளில் தீவிர பிரச்சாரம் செய்தனர்.

முதல் கட்ட தேர்தலில் 1,314 வேட்பா ளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 1,192 பேர் ஆண்கள், 122 பேர் பெண் கள். ஆர்.ஜே.டி மூத்த தலைவரும் மெகா கூட்டணியின் முதல்வர் வேட்பா ளருமான தேஜஸ்வி யாதவ், ராகோபூர் தொகுதியில் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து பா.ஜ.க. மூத்த தலைவர் சதீஷ் குமார் களமிறங்கி உள்ளார். கடந்த 2 தேர்தல்களில் தேஜஸ்வி யாதவ் இந்த தொகுதி யில் வெற்றி பெற்றிருக்கி றார்.

# தி.மு.க. துணை பொதுச் செயலாளர்களாக பொன்முடி, மு.பெ. சாமிநாதன் நியமனம்





முன்னாள் அமைச்சர் பொன்முடி, அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர்க ளாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2026 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், கட்சி நிர்வாகிகளை அறிவித்து முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தி.மு.க. சார்பில் இது குறித்து வெளி யிடப்பட்டுள்ள அறிக்கையில்,

“தி.மு.கவின் துணைப் பொதுச் செய லாளர்களாக க.பொன்முடி மற்றும் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகி யோர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப் பாளராக பணியாற்றி வந்த சாமிநாதன், துணைப் பொதுச் செயலாளராக நிய மிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக திருப்பூர் கிழக்கு மாவட்ட திமுக பொறுப் பாளராக இல. பத்மநாபன் நியமிக்கப் பட்டுள்ளார்.

இதையடுத்து இல.பத்மநாபன் வகித்து வந்த திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் பொறுப்பு கே. ஈஸ்வரசாமிக்கு வழங்கப்படுகிறது. வேலூர் தொகுதியை வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரித்து மாவட்டப் பொறுப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

வேலூர், அணைக்கட்டு, குடியாத்தம் உள்ளிட்ட பகுதிகளை இணைத்து வேலூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளராக ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, காட்பாடி, கீழ்வைத்தியணான்குப்பம் பகுதிகளை உள்ளடக்கிய வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளராக டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. நியமிக்கப்பட்டுள்ளார்.” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொன்முடியிடமிருந்து துணைப் பொதுச் செயலர் பதவி சில மாதங்க ளுக்கு முன்பு பறிக்கப்பட்ட நிலை யில், மீண்டும் அவர் துணைப் பொதுச் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் சென்ற கார் மீது கற்களை வீசித் தாக்குதல்

## கண்ணாடி உடைப்பு

சேலம், வாழப்பாடி அருகே பா.ம.க. எம்.எல்.ஏ அருள் சென்ற கார் மீது மர்ம நபர்கள் கற்களை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் எம்.எல்.ஏ. அருளின் கார் சேதமடைந்துள்ளது.


சேலம் மேற்கு தொகுதி பா.ம.க. சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் அருள், இவர் ராமதாஸின் தீவிர ஆதரவாளர். இவருக்கும் அன்புமணி ராமதாஸின் ஆதரவாளர்களுக்கும் சேலத்தில் கடுமையான மோதல் நிலவி வருகிறது. அடிக்கடி பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் தொலைபேசி எண்ணுக்கு அன்புமணி ஆதரவாளர்கள் கொலை மிரட்டல் விடுவதும், ஆபாச வார்த்தைகளால் வசைப்பாடுவதும் தொடர்ந்து வருகிறது. இதுகுறித்து, ஏற்கனவே பா.ம.க. எம்.எல்.ஏ. அருள், பொலிஸ் நிலையத்தில், தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பு வழங்க வேண்டும் என புகார் மனுவை அளித்துள்ளார்.

இந்நிலையில், வாழப்பாடியில் உள்ள கட்சியின் நிர்வாகி இல்லத்தில் நிகழ்ந்த இறுதிச் சடங்கில் பங்கேற்று விட்டு, பாம.க. எம்.எல்.ஏ. அருள் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

அப்போது, மர்ம நபர்கள் அருள் சென்ற கார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து அருள் உடன் சென்ற ஆதரவாளர்களும் கல் வீச்சு சம்பவத்தில் ஈடுபட்டனர். பிறகு கட்டையால் இருதரப்பினரும் மாறி மாறி தாக்கிக் கொண்டனர்.

இதில் பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் அருளின் கார் சேதமடைந்தது. காருக்குள்ளே அமர்ந்திருந்த அருளை கட்சி நிர்வாகிகள் பாதுகாத்தனர். பின், தாக்குதல் நடத்திய கும்பல் அங்கிருந்து ஓட்டம் பிடித்தது. இதனைத் தொடர்ந்து, சேலம் எஸ்.பி அலுவலகத்தில் பா.ம.க. எம்.எல்.ஏ. அருள் புகார் அளித்துள்ளார்.

# அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதி ரிச்சர்ட் புரூஸ் செனி நேற்று காலமானார்



அமெரிக்க முன்னாள் துணை ஜனாதிபதி ரிச்சர்ட் புரூஸ் செனி உடல்நலக் குறைவால் காலமானார்.

தனது 84 வயதில் நேற்று அவர் காலமானார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின்மிகவும்சக்திவாய்ந்த நவீன துணை ஜனாதிபதி என போற்றப்படும் இவர், ஈராக் போர் கட்டமைப்புக்கு முக்கியக் காரணமாக இருந்தார்.

இதனிடையே நிமோனியா மற்றும் இதயம் சார்ந்த பிரச்சினைகளுக்காக மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்தநிலையில்,சிகிச்சைப்பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளதை அவரது குடும்பத்தினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் நெப்ராஸ்கா மாகாணத்தில் ஜனவரி 30 ஆம் திகதி 1941ஆம் ஆண்டு அவர் பிறந்துள்ளார்.

அமெரிக்காவின் 46 ஆவது துணை ஜனாதிபதியாக அவர் பதவி வகித்தார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் ஜனாதிபதி ஜார்ஜ் புஷ் தலைமையிலான ஆட்சியில் 2001 முதல் 2009 ஆம் ஆண்டு வரை இரு முறை துணை ஜனாதிபதியாக அவர் பதவி வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரான்ஸ் உட்பட 45 நாடுகளுக்கு விசா சலுகையை நீடித்தது சீனா

அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மன் உட்பட உலகின் 45 நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விசா இன்றி நாட்டுக்குள் நுழைவதற்கான சலுகையை சீனா நீடித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 10 ஆம் திகதி முதல் இக்கொள்கை அமுலுக்கு வரும் என கூறப்படுகின்றது.

இந்த விசா இல்லா நடைமுறை, 2026 டிசம்பர் 31 ஆம் திகதிவரை அது நடைமுறையில் இருக்கும் எனவும் சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

32ஐரோப்பியநாடுகள்உட்பட45நாடுகளுக்குரிய மேற்படி விசா சலுகை காலாவதியான நிலையிலேயே சலுகை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 30 நாள்கள்வரை விசா இன்றி சீனாவில் இருக்கலாம். அதேவேளை கொரோனா பெருந்தொற்றால் வீழ்ச்சிகண்ட சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும், தமது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேம்படுத்துவதற்காகவுமே இதற்குரிய நகர்வை சீனா மேற்கொண்டுள்ளது.

அதேவேளை அமெரிக்கா, கனடா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இச்சலுகையை சீனா வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டாய இராணுவப் படைக்கு மாற்றும் சட்டம்: கையெழுத்திட்டார் ரஷ்யாவின் ஜனாதிபதி புடின்



ஆண்டு முழுவதும் கட்டாய இராணுவப் படை மாதிரியை நோக்கி நகர்த்தும் சட்டத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கையெழுத்திட்டார்.

உக்ரைனில் போருக்கான ரஷ்யாவின் மனிதவளத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் ஜனாதிபதி விளாடிமிர் புடின் இறங்கியுள்ளார்.

அதன்படி, அடுத்த ஆண்டு தொடங்கி இராணுவத்தை ஆண்டு முழுவதும் கட்டாய இராணுவப் படை மாதிரியை நோக்கி நகர்த்தும் சட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்டார். ஏப்ரல் 1 முதல் ஜூலை 15 வரை மற்றும் ஒக்டோபர் 1 முதல் டிசம்பர் 31 வரை கட்டாய இராணுவப் படைக்கு அனுப்பப்படுவார்கள்.

இந்த புதிய சட்டமானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இராணுவப் படைக்கு ஆட்களை அனுப்பும் தன்மையை மாற்றாது.

அதே சமயம் வரைவு வாரியங்கள் எந்த நேரத்திலும் மருத்துவ பரிசோதனைகள், உளவியல் பரிசோதனை மற்றும் பிற சேர்க்கை நடவடிக்கைகளை நடத்த அனுமதிக்கிறது.

மேலும், முந்தைய வரம்பற்ற காலக்கெடுவை மாற்றியமைத்து, மின்னணு வரைவு அறிவிப்புகளுக்கு 30 நாள் காலாவதி திகதியை சட்டம் நிர்ணயிக்கிறது.

# இன்றைய ராசி பலன்கள் -05.11.2025




உங்கள் விருப்பங்கள் இன்று நிறைவேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்படபணியாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.




புத்திசாலித்தனம் மற்றும் சம நிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவனமாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் முன்னேற்றத்துக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள்.இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -05.11.2025




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்டகால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் சுய முன்னேற்றப் பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக் கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.

# மன்னாரில் புதிய காற்றாலை நடைமுறைப்படுத்தப்படாது

## முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்



மன்னார் தீவு மக்களின் விருப்பமின்றி தொடர்ந்தும் அங்கு புதிய காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்டங்களை முன்னெடுக்காமல் இருப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற ரீதியில் மீளாய்வு செய்யப்பட்ட வளங்களின் விரிவாக்கத் திட்டத்திற்கமைய, அதிக காற்று ஆற்றல் வளம் கொண்ட பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ள மன்னார் தீவில் மொத்தம் மூன்று காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

இவற்றில், ஒரு கருத்திட்டம் தம்பவனி காற்றாலை மின்னுற்பத்தி நிலைய நடவடிக்கையாக 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

ஏனைய இரண்டு கருத்திட்டங்களான, Windscape Mannar (Pvt) Ltd-இன் 20 மெகாவாட் திட்டம் எதிர்வரும் டிசம்பரிலும், Hayleys Fenton-இன் 50 மெகாவாட் திட்டம் 2026 டிசம்பரிலும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

எனினும், இந்தக் கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலை இடைநிறுத்தும் ஒரு சூழல் நிலவியது.

இந்தநிலையில், பிரதேச மக்கள் முன்வைத்த சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, குறித்த தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கருத்திட்டத்தை மன்னார் தீவு மக்களின் விருப்பத்துடன் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனாதிபதியினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வலுசக்தி அமைச்சரால் அமைச்சரவைக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் அதற்கமைய, நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய, மூன்று திட்டங்களுக்கு மேலதிகமாக வேறு காற்றாலை திட்டங்களை அங்கு நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது எனவும், அவ்வாறு அமைப்பதாயின் அதற்கு பொருத்தமான மாற்று இடம் தெரிவு செய்யப்படும் எனவும் அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.